05.05.2026.
சி.சி.31/2022
அ.சா.1. ராமலிங்கம், த/பெ.மாணிக்கம்.
**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

மோகன் என்கிற மோகனபிரியன் யார் என்றால் எனது மகன் ஆவார். மேற்படி எனது மகன்மீது பொன்னூர் காவல் நிலைய குற்ற எண்.15/2021-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ரங்கநாயகி என்பவா் கொடுத்த புகாரின்பேரில்தான் என் மகன்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் எனது மகன்மீது ரங்கநாயகி கொடுத்த புகாரில் விசாரணைக்கு அழைத்தப்பின்னர்தான் எதிரிகள்மீது காவல் நிலையத்தில் இந்த வழக்கு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

எனது மகன்மீது ரங்கநாயகி தூக்க நிலையில் இருந்தபோது அவரது 1 1/4 சவரன் நகைகளை கழட்டிக்கொண்டு காயத்தை ஏற்படுத்திவிட்டு சென்றதாகதான் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, வழிபறி செய்ததாக புகார் கொடுத்திருந்தார். எனக்கும், ரங்கநாயகி குடும்பத்திற்கும் எத்தனை வருடம் பகையுள்ளது என்றால் சுமார் 30 வருடமாக நிலம் சம்மந்தமாக பகையுள்ளது. அந்த நிலம் சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை.

எனது மகன்மீது ரங்கநாயகி கொடுத்த புகார் சம்மந்தமாக போலிசார் விசாரணைக்கு வந்தனரா என்றால் வரவில்லை. எனது மகனை நான்தான் முன்ஜாமினில் எடுத்தேன். எனது மகன் சம்பவ சமயத்தில் என்ன படித்துள்ளார் என்றால் ஐ.டி.ஐ படித்துக்கொண்டிருந்தார். தற்போது எனது மகன் பணியில் உள்ளாரா என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் நிறுவனங்களில் வேலை கிடைக்காமல் தனியார் கடையில் வேலை பார்த்து வருகிறார்.

எனது மகன் வழக்கு சம்பவத்திற்கு பிறகு எத்தனை நாள் கழித்து இந்த வழக்கு சம்பவம் நடந்தது என்றால் 4 நாள்கள் கழித்து நடந்தது. எனது மகனை நான் காவல் நிலையம் அழைத்துச்செல்லவில்லை என்றால் சரிதான். எனது மகனிடமிருந்து போலிசார் நகைகளை ஏதும் கைபற்றினார்களா என்றால் கைபற்றவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக என்னையோ எனது மகனையோ எதிரிகள் அடித்ததாக புகார் ஏதும் கொடுத்தோமா என்றால் கொடுக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக புகாரில் எதிரிகள் என்னை திட்டியதாக புகார் ஏதும் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை.

நான் எதிரிகள்மீது காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த புகாரை யார் தயார் செய்து கொடுத்தனர் என்றால் எனது வழக்கறிஞர் தயார் செய்து கொடுத்தார். அந்த புகார் கையால் எழுதப்பட்டதா அல்லது கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டு பின்னர் தட்டச்சு செய்யப்பட்டது. புகாரில் உள்ள விஷயங்கள் ஞாபகம் உள்ளதா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையிலும், புகாரிலும் சொல்வதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் என்மகன்மீதுள்ள வழக்கினை வாபஸ் வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் ரங்கநாயகியின் பேரன் மற்றும் பொதுமக்கள்மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தினை சுமார் எத்தனை நபர்கள் பார்த்தனர் என்றால் 2, 3 நபர்கள் பார்த்தனர். அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் அதில் ஒருவர் இறந்துவிட்டார், மற்றவர்கள் சாட்சி சொல்ல வரவில்லை. நான் 19.01.2021ம் தேதி நடந்த சம்பவத்திற்காகத்தான் இவ்வழக்கு புகாரை கொடுத்தோம் என்றால் சரிதான்.

எனது மகன் எந்த தப்பும் செய்யவில்லை என்பதற்காகதான் புகார் கொடுத்தேன். 19-ஆம் தேதியும், அதன் பின்னிட்டும் எந்தவொரு சம்பவமும் நடந்ததா என்றால் எதுவும் நடக்கவில்லை. நான் எதிரிகள்மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.